Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13 நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 மார்கழி 17 ஸபர் 1 இதழ் 318
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-1-79

அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சுவைப்பிரியர்களின்
மனநிறைவுக்கு
ஓர் ஸ்தாபனம்...
றிச் கோப்பி பார்
67-68 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7509

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இன்று உதயம்!

## 'துன்பங்களின் மத்தியிலும் விடிவுகிடைக்கும் நம்பிக்கை'

### அமிரின் புத்தாண்டுச் செய்தி



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அமிர்தலிங்கம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் துன்பங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்குமென்ற நம்பிக்கை உள்ளத்தில் எழுகின்றது'' என்று தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தி வருமாறு!

பயங்கரமான சூறாவளியின் அகோரத் தாக்குதலின் பின்பு அத் தாக்குதலினாலே தமது வீடுகளை இழந்து உற்றார், உறவினரைப் பறிகொடுத்து உடைமைகளையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் தமிழ்மக்கள், விடைபெற்றுச் செல்லும் இந்த 1978ம் ஆண்டைப் பெருமூச்சோடு அனுப்பிவைத்துப் புதிய நம்பிக்கையோடு 1979ம்ஆண்டை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

மறையும் ஆண்டு அதற்கு முந்திய ஆண்டைப்போல பாரதூரமான இனக் கொலைக்கு இடமளிக்காவிட்டாலும் தமிழினத்திற்குப் புதுநம்பிக்கை அளிக்கக்கூடிய எந்த நிகழ்ச்சிக்கும் வழி வகுக்கவில்லை அதற்கு மாறாக அந்த ஆண்டு முடிவுக்கட்டத்தில் ஈழத் தமிழ்மக்கள் குறிப்பாகக் கிழக்கிழங்கைத் தமிழ் பேசும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை இயற்கையின் கொடூரத்தினால் அனுபவித்தார்கள். மலரும் புத்தாண்டு அத் [illegible] துடைத்து ஒரு புதிய வாழ்க்கைக்கு வழிகாட்டுமென்ற நம்பிக்கையோடு நொந்திருக்கும் அந்த மக்கள் அதை

(8-ம் பக்கம் பார்க்க)

## உபவேந்தர் 'வித்தி'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகவளாகம் இன்றுமுதல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாக அந்தஸ்துப் பெறுகிறது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முதலாவதுஉபவேந்தராக பேராசிரியர் டாக்டர் சு. வித்தியானந்தன் இன்று காலை பதவியேற்பார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நீதியரசர் திரு. வி. [illegible] எப்போது பதவியேற்பார் என்பதுபற்றி இன்னும் தெரியவில்லை.

புதிய பல்கலைக்கழக அமை

(8ம் பக்கம் பார்க்க)

## 'தேசிய அபிவிருத்திக்கு ஏற்பட்ட சவால்!'

### பிரதமரின் புத்தாண்டு செய்தி



(கொழும்பு)

அண்மையில் நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட சூறாவளியும் வெள்ளமும் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது உண்மையே. ஆனாலும் இது அரசாங்கத்தின் முன்னேற்றப் பாதையைத் தடைசெய்துவிடக்கூடாது. தேசிய அபிவிருத்திக்கு இதை ஒரு சவாலாக ஏற்றுச் செயல்பட ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

இவ்வாறு புத்தாண்டையொட்டி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

குறிக்கோளில்லாமல் சென்ற பாதையை மாற்றி ஒரு புதிய பாதையை ஏற்படுத்தித் தந்த கடந்தவருடத்திய பலாபலன்களை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அனுபவிக்கவேண்டுமென்றும் பிரதமர் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்

ஒவ்வொருமனிதனும் தனது தலைவிதியைத் தானே நிர்ணயித்துக்கொள்வதுபோல நாட்

(8-ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்து

வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இன்றைய 'ஈழநாடு'வுடன் 1979 ம் வருட பஞ்சாங்கமும் வெளியாகியுள்ளது.

## யுத்தகால அடிப்படையில் மட்டுநகர் புனரமைப்பு

### இளைஞர்களை அழைக்கிறார் 'கனகர்'

(மட்டக்களப்பு)

அரசியல் கட்சி பேதங்களை மறந்துசூறாவழியினாலும் வெள்ளத்தினாலும் அழிந்துபோயுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைப் புனரமைப்பதற்கு இளைஞர்கள் யுத்தகால அடிப்படையில் சேவைசெய்ய முன்வரவேண்டுமென்று மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு எம். கனகரத்தினம் இன்று மட்டக்களப்பில்வேண்டுகோள் விடுத்தார்.

முன்பு தாமும் இராணுவத்தில் கடமையாற்றியதை நினைவூட்டிய திரு. கனகரத்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்குத் தேவையான பணம் அத்தனையும் கொடுப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் முன்வந்துள்ளனரென்றும் ஆனால் இந்த உதவிகள் தகுந்தபடி பயன்படுத்தப்படவேண்டியது அவசியமென்றும் கூறினார்.

பீற்றேர்ஸ்
இல. 9, 10
ஜுபிலிபஜார்,
யாழ்ப்பாணம்.
0 சகலவித அவுட்மோட்டர் மக்னற்றோ கொயில்கள்
0 மோட்டார் சைக்கிள் மக்னற்றோ கொயில்கள்
0 வாட்டர்பம் மக்னற்றோ கொயில்கள்
சகலவிதமான கொயில்களும் மற்றும் மின்விசிறி, றேடியோ டிரான்ஸ்போமர்கள் வைன்டிங்செய்தும் திருத்தியும் கொடுப்பவர்கள். 1212

வாடிக்கையாளருக்கும் மற்றும் அன்பர்கள் அனைவர்க்கும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக...
புத்தாண்டு உங்களுக்கு சகல செல்வங்களையும்
கொண்டுவர வாழ்த்துகிறோம்...
உங்கள் செல்வம் பன்மடங்காகப் பெருக உங்கள் பணத்திற்கு
24% வீத வட்டி பெறுங்கள்
இரு வருட வைப்புப் பணத்திற்கு - வட்டி கால முதிர்வில்
20 வீதம் - இருவருட வைப்புக்கு - மாதாந்த வட்டி
18 வீதம் - ஒரு வருட வைப்புக்கு - மாதாந்த வட்டி
குறைந்த பட்ச வைப்பு ரூபா 500/-
விபரங்களுக்கு:-
மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட)
நிறுவனம் தொலைபேசி இல: 418
இல:124, கே.கே.எஸ்.வீதி-யாழ்ப்பாணம்.
தலைமை அலுவலகம்:
54, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.

புத்தாண்டு வாழ்த்துக்கள்
கடந்த பலவருடங்களாக எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு ஆதரவு தந்த வாடிக்கையாளர்களுக்கு எமது கனிவான புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
இப்புதுவருடத்துடன் விரிவுபடுத்திய எமது தொழிற்பாடுகளான உள்ளூர் மருந்து மூலிகைகள் மற்றும் எண்ணெய் வகைகளின் கொள்வனவு, விற்பனை வினியோகம் ஆதியன பற்றியும் வாடிக்கையாளரின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்.
ஸ்ரீ லங்கா ஆயுள்வேத
மருந்துக் கூட்டுத்தாபனம்,
14 - 15 நவீன சந்தை - மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
1210

எமது வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள்

அறிமுகம்செய்வோர் யாவருக்கும்

## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

# 20%

உங்கள் பணத்தை எங்களுடன் முதலீடு செய்து

ஆகக்கூடிய வட்டியைப் பெற்றுக்கொள்ளுங்கள்

TFC

38 வருடகால நேர்மையான சேவையும்

அனுபவமும் எமக்குண்டு

# த பினான்ஸ் கொம்பனி லிமிட்.

191, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7680

தலைமையகம்: 'செலின்கோ மாளிகை' கொழும்பு.

ஏனைய சேவைகள்:

யமஹா மோட்டார் சைக்கிள்கள் விற்பனை

வீட்டுப்பாவனைப் பொருட்கள் தவணை முறையில்
கொள்வனவுசெய்யும் வசதிகள்

போட்டோஸ்ராற் பிரதிகள் குறைந்த செலவில்
உடனடியாக செய்துகொடுத்தல்

## நல்வரவு ஆகட்டும்

செல்வம் பெருகட்டும் சேர்துயரம் போகட்டும்
அல்லல் அகலட்டும் அறிவுலகு காணட்டும்
பல்வளம் சிறக்கட்டும் பாரில்இன்பம் பரக்கட்டும்
நல்வரவாய் எழுபத்துஒன்பதை நாம் காண்போம்.

... சு. கதிர்காமத்தம்பி

● ●

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்ப
ததன் கூட்டென இருபத்தாறல்லஎட்டு
பாயிரம்போற் பலநூல்கள் கற்ருேர் யாப்பர்
பலநிலைகொள் சாகசங்கள் விண்ணிற் காண்பர்
தாயிரங்கும் மேனிலைபோல் சகத்துள்ளோரிகள்
தர்மத்தின் பெயர்விளங்கத் தய வேசெய்வர்
நீயிரங்கியருள்புரிய நன்செய் புன்செய்
நிறைவு கொள்ளுமாதலினல் வருக வாழ்க.

...எழினி சி. சிவநாதபிள்ளை

---

ஆசிரியருக்குக் கடிதம்:

# சிங்கள-தமிழ் மாற்றுக்குடியேற்றம்

வடக்கில் சிங்களவரையும் தெற்கில் தமிழரையும் குடியமர்த்தப்போவதாக ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தன தமது கட்சியின் பாராளுமன்றக் குழுவில் கருத்துவெளியிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியானதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

தமிழ்மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்கள் என்று கருதும் பகுதிகளில் பெரும்பான்மைச் சமூகத்தவர்களை திட்டமிட்டுக் குடியமர்த்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை இப்பொழுதுதான் புதிதாக உருவானதொன்றல்ல.

பெரிய சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்திலிருந்தே இத்திட்டத்தை ஐக்கியதேசியக் கட்சி கொண்டிருக்கின்றது

எனவே தமிழ்ப்பகுதிகளில் சிங்களமக்களைக் குடியமர்த்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பதானது அவர் ஏதோ புதிய கொள்கையொன்றை அறிவித்திருப்பதாகக்கருதமுடியாது.

ஐக்கிய தேசியக்கட்சியை நிரந்தரமாக ஆட்சியில் இருக்கச் செய்வதற்காகவே மலையகத்தில் 10 லட்சம் மக்களின் குடியியல் உரிமைகளை அக்கட்சி அபகரித்தது என்பதையும் இங்கு நினைவுகூரவேண்டும்.

பலமாதிரியான தாக்கங்களுக்கும் வீழ்ச்சிகளுக்கும் முகம் கொடுத்து மீண்டும் அபரிமிதமான பலத்தோடு பதவிக்கு வந்துள்ள ஐக்கியதேசியக்கட்சியின் முக்கியமான கொள்கைகளில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே ஜனாதிபதியின் அறிவிப்பு எடுக்குக் காட்டுகின்றது.

இதில் புதுமை என்னவென்றால் தமிழ்மக்களை தென்பகுதியில் குடியமர்த்தவிருப்பதாக அறிவித்திருப்பதுதான்.

ஏனென்றால் தென்னிலங்கையில் ஏற்கனவே லட்சக்கணக்கான தமிழர்களான இந்திய வம்சாவழியினர் இருந்து வருகிருர்கள். இவர்களை திட்டமிட்டு சிங்களக் கிராமப்புறங்களில் குடியமர்த்தும் நோக்கமிருக்குமாஞல் அதற்கு ஈடாக தமிழ்ப்பகுதியில் சிங்கள மக்களைக் குடியமர்த்தலாம் என்று கருதப்படுமாஞல் அதைப்போல் அநீதியான முடிவு வேறு இருக்கமுடியாது.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து தமிழ் மக்கள் அரசாங்கம் கருதுவது போல் தென்னிலங்கையில் திட்டமிட்டகுடியேற்றங்களில் போய்குடியேறுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. அவ்வாறு வடக்குகிழக்கு மாகாணங்களிலிருந்து சிங்களப் பகுதிகளில் தமிழ்மக்களைக் குடியமர்த்த வசதியிருக்குமாஞல், அந்த இடங்களில் வடக்கில் குடியமர்த்தப்படவிருக்கும் சிங்களக் குடும்பங்களையே குடியமர்த்துவதுதான் நியாயமாகும்.

அதேபோன்று தமிழ்ப்பகுதிகளில் சிங்களமக்களைக் குடியமர்த்த முனைவதிலும்பார்க்க அதற்கான காணிகளில் இங்கு வசதியற்றிருக்கும் தமிழ்க் குடும்பங்களையே குடியமர்த்த வேண்டும். இதைவிடுத்து வடக்கில் சிங்களவர்களையும் தெற்கில் தமிழர்களையும் குடியமர்த்தப்போகிருேம் என்று கூறுவதில் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை,

தெற்கில் குடியேற வடக்குகிழக்கிலிருந்து தமிழ் மக்கள் விரும்பாதநிலையில் சிங்கள மக்களை வடக்கு கிழக்கில் குடியமர்த்துவதாயின் இந்தப்பிரதேசங்களை தமிழர்கள் தமது பாரம்பரிய பிரதேசம் என்று சொந்தம் கொண்டாடுவதைப் படிப்படியாக இல்லாமல் செய்வதும், தமிழர்களை தங்கள் சொந்தப்பகுதிகளிலேயே சிறுபான்மை நிலைக்கு உள்ளாக்குவதும்தான் நோக்கமாகஇருக்க முடியும்.

சி. ரெங்கநாதன்,
யாழ்ப்பாணம்.

# தேவையான இடங்களுக்கு குழாய்நீர் வழங்குக

குடிநீர் மனிதனுக்கு முக்கியமான தேவைகளில் ஒன்ருகும். யாழ்ப்பாணம் நகரத்தின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது யாழ். மாநகரசபையின் முக்கிய கடமையாகும்.

யாழ். நகரத்தில் பல இடங்களில் கடந்த சில வருடங்களுக்குமுன் குழாய்மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வீதியோரங்களில் மட்டும் இக்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் பின்னர் மற்றப்பகுதிகளுக்கும் இந்தக்குழாய்நீர்த் திட்டம் விஸ்தரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் கிணற்று வசதியுண்டு. நல்ல தண்ணீர்க்கிணறுகள் உள்ளபகுதிகளுக்கும்சில இடங்களில் குழாய்நீர் வழங்கப்பட்டுள்ளது. ஆனல் உண்மையிலேயே குடிநீர அத்தியாவசியம் தேவைப்படும் சில இடங்களுக்கு குறிப்பாக உப்பு, சவர்நீர் உள்ள கிணறுகள் உள்ள பகுதிகளுக்குக் குழாய்நீர் வழங்கப்படவில்லை. இதனல் அப்பகுதி மக்கள் குடிநீருக்குப் பெரும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

ஆதலால் யாழ். மாநகர சபையினர், எந்தெந்தப்பகுதிகளில் பாவிக்கமுடியாத உப்பு, சவர்நீர், உள்ளதென்பதை, ஒரு கணக்கெடுப்பின் மூலம் அறிந்து அப்பகுதிக்கு முதலில் குழாயநீர் வழங்கிஞல் அது பெரும் சேவையாகும

சி. கந்தையா
யாழ்ப்பாணம்.

---

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

# 150 மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை மறுப்பு

[உடுப்பிட்டி]

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு யாழ். இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் சுமார் 150 மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம். இதனல் பிரஸ்தாப மாணவர்கள் அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளனர்.

தொழில் நுட்பக் கல்லூரியின் பயிற்சி நெறிகளுக்கு உயர் கல்வி அமைச்சின் நிபந்தனைக்கமைய 75 வீதம் வரவு- இல்லாத காரணத்தினலேயே இத்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தொழில் நுட்பக் கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்களில் வணிகத்துறை, பொறியியல், டிப்ளோமா முதலிய சகல பயிற்சி நெறிகளையும் சேர்ந்த மாணவர்கள் அடங்குகின்றனர்.

இவர்களில் 4 வருடப் பயிற்சி நெறியில் பயிலும் டிப்ளோமா மாணவர்கள் இதனல் நான்கு வருடப் பயின்றும் இறுதிப் பரீட்சையில் தோற்ற முடியாது ஐந்து வருடங்களின் பின்னரே இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாறு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தமது பயிற்சி நெறிகளில் பயிலவும் அனுமதிக்கப்படவில்லை.

இதனல் பிரஸ்தாப 150 தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் தம்மை இறுதிப் பரீட்சைக்கு அனுமதிக்குமாறு கல்வி அமைச்சரைக் கோரியுள்ளார்கள். [உ]

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 17-ந் திகதி
திங்கட்கிழமை
(1-1-79)

**மேடம்:-** பொறியியலாளர்களுக்குப் பொன்னன தினம், பூமி விவகாரத்தில் இன்று முடிவு காணப்படும், வாகனசுகத்துடன் வாழ்க்கை நலனுக்கும் இடமுண்டு

**இடபம்:-** உள்ளம் உவகையால் துள்ளும், மக்களால் மகிழ்ச்சி, பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாரனின்கணை தாக்கும்.

**மிதுனம்:-** பகைமூட்டம் வட்டமிடும், தொழில்துறையிலும்முட்டுக்கட்டைகள்தோன்றக்கூடும், கடிதமொன்று கவலையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

**கடகம்:-** வாழ்க்கை இன்று தேனுக இனிக்கும், பயனுள்ள தொடர்பு ஒன்றும் ஏற்படுவதற்கிடமுண்டு. பெற்ருேரின் உதவியுமுண்டு.

**சிங்கம்:-** மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், விஷபீடைக்குமிடமேற்படும், தொழில்துறையிலும் கவனஞ்செலுத்திக்கொள்ளவும், அவதானம் வேண்டும்.

**கன்னி:-** தெளிந்தமனம், தெய்வகுருபக்தியும் மேலோங்கி நிற்கும், பரோபகாரச் சிந்தை வளரும், பொதுப் பணியை நாடுவீர், நல்லநாள்.

**துலாம்:-** எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும், அரசாங்க ஊழியரின் இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்·** பொருளீட்டுவதில் புதிய வழிகளைக்கையாளுவீர்கள், எதையும் சிறப்பாகச் செய்வதில்முதலிடத்தைப் பெறுவீர்கள், மக்களாலும் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு:-** திருடர் பயத்திற்கிடமேற்படும், தொழில்புரியுமிடத்தில் அவதானம் வேண்டும், பணத்துடன் பழகுபவர் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**மகரம்:-** அரசியல்வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம், நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நன்மை தரும்.

**கும்பம்:-** கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் மனம் நாடும், குடும்பத்திலும் பிணைப்புக்கள்பலபடும், தெய்வத்தின் அருளும் கிடைக்கும்.

**மீனம்:-** தொடங்கிய விடயம் பாதியில்தடைப்படும், இதனல் பொருள் விடயத்திற்கும் இடமுண்டு, குடும்பத்திலும் உடல்நலக்குறைவு தென்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# சோமாலிய தூதுக்குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

சோமாலிய வெளிநாட்டமைச்சர் தலைமையிலான நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இக்குழுவை வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் விமான நிலையத்தில் வரவேற்ருர்.

இக்குழு பிலிப்பைன்ஸ், மலேஷியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யும். (உ)

## காரியாலயம் இடம் மாறுகிறது

(நெல்லியடி)

மந்திகையிலுள்ள நீர்ப்பாசன திணைக்களக் காரியாலயம் 1979ம் ஆண்டு முதல் மூடப்படவிருக்கின்றது. இக்காரியாலயம் யாழ்ப்பாணத்திலுள்ள அதன் காரியாலயத்துடன் இணைந்து செயற்படவுள்ளது.

இக்காரியாலயத்தில் கடமையாற்றிய ஊழியர்களும் பல்வேறு இடங்களுக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

(உ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணர்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப்பிள்ளையார்) கோவிலில் விநாயகர் விரத 18ம் நாளாகிய இன்று மாலை பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்தசர்மாவின் ''சிங்கமுகாசூரன் ஹதம்'' என்னும் பொருள்பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் நடைபெறுகின்றது

[ஊ]

## ஒளிவிழா

(உடுப்பிட்டி)

கரவெட்டிப் பங்குக் கத்தோலிக்க மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 'ஒளிவிழா' கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. மனுவேற்பிள்ளையின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கரவெட்டி புனித லூர்த்து மாதா கன்னியர்மடத் தாயார் அருட் செல்வி ஜெரோம். கலந்துகொண்டு மறைக்கல்வி 'வினவிடை'ப் போட்டியில் சித்தியெய்திய மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயப் பங்குச் சபைச் செயலாளர் திரு சி. வின்சென்ற் நன்றி கூறினர்.

விழாமுடிவில் பலகலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இவ்விழாவிற்கான ஒழுங்குகளை கரவெட்டிப் பங்குக்குருக்களைக் குருவர் அருட்திரு டொமினிக் அடிகளார் செய்திருந்தார். (உ)

## உலகை வெல்லும் குழந்தைகள்

( காரை. செ. சுந்தரம்பிள்ளை )

வஞ்சகம் சூது பொறமை யிலாத
வடிவம் குழந்தை யம்மா—அது
கொஞ்சி மகிழும் இடத்தில் கடவுள்
குடிவந் திருப்ப னம்மா.

கொல்லும் கவலையை வெல்லும் மழலை
குழந்தைக் கணிகலமாம்—அது
வெல்லச் சுவையையும் வெல்லும் மழலையால்
வெல்லும் உலகை யெல்லாம்

வெள்ளை மனம்கொண்ட பிள்ளைகள் வாழ்வதால்
உள்ள துலக மம்மா—பெருங்
கள்ள மனத்தவர் கல்லு மனதும்
கரைக்கும் குழந்தை யம்மா.

பிஞ்சுக் குழந்தை உளம் வரப்பெற்றவர்
பேறு பெரிய தம்மா—அவர்
அஞ்சி நடந்திடத் தேவையில்லை எங்கும்
ஆணை நடக்கு மம்மா.

[1979 ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டெனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அதனையொட்டி இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது ]

'மில்க்வைற்'
தயாரிப்புக்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு,
நாட்டின் பொருளாதார
வளர்ச்சிக்குக்கொடுக்கும்
ஆதரவாகும்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# ஈழநாடு

அண்ணா
தயாரிப்பின்
வெற்றுப்
பைக்கட்டு
களை அனுப்பி
இனம்
பொருட்களை
யும், 79-ம்
ஆண்டு
கலண்டரை
யும் பெற்றுக்
கொள்ளவும்.

சோயாரின்
முழுக்குடும்பத்திற்கும்
ஏற்ற புரதச்சத்து
நிறைந்த அதி உன்னத
பானம்

அண்ணா தொழிலகம், (தொலைபேசி 7412) இணுவில்.

## பஞ்சாங்கம் 1979

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|---|
| ஞா | — 7 14 21 28 | — 4 11 18 25 | — 4 11 18 25 | 1 8 15 22 29 | — 6 13 20 27 | — 3 10 17 24 |
| தி | 1 8 15 22 29 | — 5 12 19 26 | — 5 12 19 26 | 2 9 16 23 30 | — 7 14 21 28 | — 4 11 18 25 |
| செ | 2 9 16 23 30 | — 6 13 20 27 | — 6 13 20 27 | 3 10 17 24 — | 1 8 15 22 29 | — 5 12 19 26 |
| பு | 3 10 17 24 31 | — 7 14 21 28 | — 7 14 21 28 | 4 11 18 25 — | 2 9 16 23 30 | — 6 13 20 27 |
| வி | 4 11 18 25 — | 1 8 15 22 — | 1 8 15 22 29 | 5 12 19 26 — | 3 10 17 24 31 | — 7 14 21 28 |
| வெ | 5 12 19 26 — | 2 9 16 23 — | 2 9 16 23 30 | 6 13 20 27 — | 4 11 18 25 — | 1 8 15 22 29 |
| ச | 6 13 20 27 — | 3 10 17 24 — | 3 10 17 24 31 | 7 14 21 28 — | 5 12 19 26 — | 2 9 16 23 30 |

| | ஜூலை | ஆகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|
| ஞா | 1 8 15 22 29 | — 5 12 19 26 | 30 2 9 16 23 | — 7 14 21 28 | — 4 11 18 25 | 30 2 9 16 23 |
| தி | 2 9 16 23 30 | — 6 13 20 27 | — 3 10 17 24 | 1 8 15 22 29 | — 5 12 19 26 | 31 3 10 17 24 |
| செ | 3 10 17 24 31 | — 7 14 21 28 | — 4 11 18 25 | 2 9 16 23 30 | — 6 13 20 27 | — 4 11 18 25 |
| பு | 4 11 18 25 — | 1 8 15 22 29 | — 5 12 19 26 | 3 10 17 24 31 | — 7 14 21 28 | — 5 12 19 26 |
| வி | 5 12 19 26 — | 2 9 16 23 30 | — 6 13 20 27 | 4 11 18 25 — | 1 8 15 22 29 | — 6 13 20 27 |
| வெ | 6 13 20 27 — | 3 10 17 24 31 | — 7 14 21 28 | 5 12 19 26 — | 2 9 16 23 30 | — 7 14 21 28 |
| ச | 7 14 21 28 — | 4 11 18 25 — | 1 8 15 22 29 | 6 13 20 27 — | 3 10 17 24 — | 1 8 15 22 29 |

### தபால், தந்தி விகிதங்கள்

(மாத்தறைக்கு உரியவை)

| உள்நாடு | ரூ. ச. |
|---|---|
| போஸ்ற் காட் | 15 |
| 1 அவுன்ஸுக்கு மேற்படாத கடிதத்திற்கு | 25 |
| மேற்பட்ட அவுன்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | 25 |
| [illegible] | 1-25 |

### ஆலய உற்சவ தினங்கள்

பெப் 12 கீரிமலை நகுலேஸ்வரர் கொடி
,, 26 கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தம்
மார்ச் 3 முன்னேஸ்வரம் சிவன்கொடி
,, 12 முன்னேஸ்வரம் தீர்த்தம்
,, 23 வண். வைத்தீஸ்வரர் கொடி



### பெரியார் தினங்கள்

ஜன. 2 சேர் பொன். அருணாசலம்
,, 22 சுவாமி ஞானப்பிரகாசர்
,, 30 காந்திஜி அமரத்துவ தினம்
மார்ச் 22 D. S. சேனநாயக்கா மறைவு தினம்
மே 27 ஸ்ரீ ஜவஹர்லால் நேரு மறைவு தினம்

### இந்துக்களின் விசேஷ நாட்கள்

ஜனவரி 14 தைப்பொங்கல்
பெப். 10 தைப்பூசம்
,, 25 மகா சிவராத்திரி
ஏப்ரல் 10 பங்குனி உத்தரம்
,, 14 சித்தார்த்தி வருடப்பிறப்பு
மே 10 சித்திரைச் சித்திரை

தபால், தந்தி கட்டணங்கள்
(மாற்றத்திற்கு உரியவை)

| உள்நாடு | ரூ. ச. |
|---|---|
| போஸ்ற் காட் | 15 |
| 1 அவுன்ஸுக்கு மேற்படாத கடிதத்திற்கு | 25 |
| மேற்பட்ட அவுன்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | 25 |
| விமானத் தபால் கட்டணம் | 1-25 |
| பதிவுக் கட்டணம் | 1-00 |
| அவசர விநியோகக் கட்டணம் | 1-50 |
| பார்சல் முதல் இருத்தலுக்கு | 1-00 |
| மேற்பட்ட ஒவ்வொரு ருத்தலுக்கும் (ஆகக்கூடிய நிறை 22 ருத்தல்) | 50 |
| 4 அவுன்ஸ் நிறைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட புதினப் பத்திரிகை | 15 |
| மேற்பட்ட ஒவ்வொரு 4 அவுன்ஸுக்கு அல்லது அதன் பாகத்திற்கு | 15 |
| அச்சிட்ட திறந்த பக்கற் முதல் 1 அவுன்ஸுக்கு | 20 |
| மேலதிக 2 அவுன்ஸுக்கு | 10 |
| தபாலில் சேர்க்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் | 1-50 |
| கணக்குத் தபால் கட்டணம் (மேலதிக) | 30 |
| சாதாரணத் தந்தி — 10 சொற்கள் வரை | 75 |
| மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் | 10 |
| அவசரத் தந்தி — 10 சொற்கள் வரை | 1-50 |
| மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் | 20 |
| போஸ்ரல் ஓடர் கொமிஷன் | |
| -/50 தொடக்கம் 1-50 வரை | 05 |
| ரூபா 2/- தொடக்கம் ரூ. 4/- வரை | 10 |
| ரூபா 5/- தொடக்கம் ரூ 10 வரை | 15 |
| ரூபா 15/- தொடக்கம் ரூ. 20/- வரை | 20 |
| மணிஓடர் கொமிஷன் ரூபா 20/-க்கு | 25 |
| 20 ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு - ஒவ்வொரு 20 ரூபாவுக்கும் 25 சதவீதம் (மணிஓடர் ஆகக்கூடிய தொகை ரூ. 600/-) | |
| மிகுதித் தொகைக்கு ரூபா 600/- வரை | 25 |
| இன்சூரன்ஸ் கட்டணம் ரூபா 100/- வரை | 1-00 |
| மேலதிக ரூ. 100/-க்கு அல்லது அதன்பகுதிக்கு | 1-00 |
| பத்திரிகைகள், வெளியீடுகளுக்கான வருடாந்த பதிவுக் கட்டணம் | 5-00 |

## வெளிநாட்டு தபாற் கட்டணங்கள்
விமான தபாற்சேவை

| | (அரை அவுன்சுக்கு) கடிதங்கள் | அரை அவுன்சுக்கு 2ம் வகுப்பு தபால்கள் | (விமானப் பார்சல்கள்) அரை கிலோ அல்லது 1 ருத்தலுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| கனடா | 3-75 | 1-50 | 97-00 |
| மக்கள்சீனக் குடியரசு | 3-00 | 1-25 | 82-50 |
| துபாய் | 2-25 | 1-00 | |
| யப்பான் | 3-00 | 1 25 | 108-00 |
| இந்தியா | 2-00 | -70 | 77-00 |
| குவைத் | 2-25 | 1-00 | |
| லிபியா, ஈரான் | 2-00 | 1-00 | |
| மலேசியா, சிங்கப்பூர் | 2-25 | 1-00 | 50-00 |
| மாலைதீவு | 2-00 | -85 | 36-50 |
| நோர்வே | 3-00 | 1-25 | |
| ஓமான் | 2-25 | 1-00 | |
| பாகிஸ்தான் | 2-00 | -95 | 61-50 |
| சவூதி அரேபியா | 2-25 | 1-00 | |
| ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு | 3-00 | 1-25 | 71-00 |

சில நாடுகளுக்கும் ஆகாயக் கடிதக் கட்டணம் ஒரு ரூபா 75 சதம் மெட்றிக் முறை நடைமுறைப்படுத்தும் வரை ருத்தல் முறையிலேயே பார்சல்கள், தபால்கள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படும்.

தரைமார்க்கமான கடிதங்களுக்கு 1 அவுன்ஸ்வரை (30 கி.) 1 ரூபா 50 சதமும் ஒரு அவுன்ஸுக்குக் கூடுதலாகவும் இரண்டு அவுன்ஸ் வரையும் (50 கி.) 2 ரூபா 70 சதமும், 2 அவுன்ஸுக்குக் கூடுதலாகவும் 4 அவுன்ஸ் வரையும் (100 கி.) 3 ரூபா 60 சதமும், 8 அவுன்ஸுக்குக் கூடுதலாகவும் 1 ருத்தல் வரையும் (500 கி.) 13 ரூபா 80 சதமும், 1 ருத்தலுக்கு கூடுதலாகவும் 2 ருத்தல் வரையும் (1000 கி) 24 ரூபாவும் அறவிடப்படும். அஞ்சல் அட்டைகள் 70 சதமாக இருக்கும்.

அச்சடித்த காகிதங்களுக்கு இரண்டு அவுன்ஸ் வரை 1 ரூபா 20 சதமும், இலங்கையில் பிரசுரிக்கப்பட்டு புதினப்பத்திரிகைகளாகப் பதிவு செய்யப்பட்ட பருவ வெளியீடுகளுக்கு இரண்டு அவுன்ஸ் வரை 90 சதமும் அறவிடப்படும்.

## ஆலய உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| பெப் | 12 | கீரிமலை நகுலேஸ்வரர் கொடி |
| ,, | 26 | கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தம் |
| மார்ச் | 3 | முன்னேஸ்வரம் சிவன்கொடி |
| ,, | 12 | முன்னேஸ்வரம் தீர்த்தம் |
| ,, | 13 | வண். வைத்தீஸ்வரர் கொடி |
| ,, | 29 | மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி |
| ஏப். | 9 | வண். வைத்தீஸ்வரர் தேர் |
| ,, | 15 | மானிப்பாய் மருதடிவிநாயகர் தீர்த்தம் |
| ,, | 23 | நீர்வேலி கந்தசுவாமி கொடி |
| மே | 11 | நீர்வேலி கந்தசுவாமி தீர்த்தம் |
| ஜூன் | 25 | நயினாதீவு நாகபூஷணி கொடி |
| ,, | 29 | மாவிட். கந்தசுவாமி கொடி |
| ஜூலை | 9 | நயினாதீவு நாகபூஷணி தீர்த்தம் |
| ,, | 23 | மாவிட். கந்தசுவாமி தீர்த்தம் |
| ,, | 24 | கதிர்காமம் கொடி |
| ,, | 29 | நல்லூர் கந்தசுவாமி கொடி |
| ஆக. | 8 | கதிர்காமம் தீர்த்தம் |
| ,, | 21 | நல்லூர் கந்தசுவாமி தேர் |
| ,, | 22 | செல்வச்சந்நிதி கொடி |
| ,, | 24 | தெல்லிப்பழை துர்க்கா தேவாலயம் கொடி |
| செப். | 6 | செல்வச்சந்நிதி தீர்த்தம் |
| ,, | 20 | வல்லிபுர ஆழ்வார் கொடி |
| ,, | 22 | வண்ணை வெங்கடேசப் பெருமாள் கொடி |
| ,, | 30 | வண். வெங்கடேசர் தேர் |
| அக். | 5 | ஆழ்வார் சமுத்திரத் தீர்த்தம் |



செந்தமிழ் உரை நடைக்கும், சைவசித்தாந்த விருத்திக்கும் முன்னோடியாய்த் திகழ்ந்த நல்லை நகர் நாவலரின் நூற்றாண்டையொட்டி அப்பெரியாரின் திருவுருவப் படத்தை இவ்வாண்டு ஈழநாடு பஞ்சாங்கத்தில் வெளியிடுவதில் பெருமைப்படுகின்றோம்.

| | | |
|---|---|---|
| ஜன. | 9 | சேர் பொன். அருணாசலம் |
| ,, | 23 | சுவாமி ஞானப்பிரகாசர் |
| ,, | 30 | காந்திஜி அமரத்துவ தினம் |
| மார்ச் | 22 | D. S. சேனநாயக்கா மறைவு தினம் |
| மே | 27 | ஸ்ரீ ஜவஹர்லால் நேரு மறைவு தினம் |
| ஜூலை | 4 | சுவாமி விவேகானந்தர் |
| ,, | 7 | நாவலி சோமசுந்தரப் புலவர் |
| ,, | 19 | சுவாமி விபுலானந்தர் |
| ஒகஸ்ட் | 7 | ரவீந்திரநாத் தாகூர் |
| ,, | 16 | இராமகிருஷ்ண பரமஹம்ஸர் |
| செப். | 8 | சுவாமி சிவானந்தர் ஜயந்தி |
| ,, | 9 | சுவாமி ஆனந்த குமாரசுவாமி |
| ,, | 11 | சுப்பிரமணிய பாரதியார் |
| ,, | 26 | S. W. R. D. பண்டாரநாயக்கா மறைவு தினம் |
| ஒக். | 2 | மகாத்மா காந்தி ஜயந்தி |
| நவ. | 26 | சேர் பொன். இராமநாதன் மறைவு தினம் |

## குருபூசைத் தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜன. | 22 | திருநீலகண்டர், தாயுமான சுவாமிகள் |
| பெப். | 7 | கண்ணப்ப நாயனார் |
| ,, | 15 | திருவள்ளுவர் |
| மார்ச் | 6 | கச்சியப்பர் |
| ஏப்ரல் | 7 | யோகசுவாமிகள் |
| ,, | 22 | இலக்கணசுவாமிகள் திருநாவுக்கரசு நாயனார் |
| ஜூன் | 11 | திருஞானசம்பந்தர் |
| ,, | 29 | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 1 | சுந்தரமூர்த்தி நாயனார் |
| டிசம்பர் | 10 | ஆறுமுகநாவலர் |

| | | |
|---|---|---|
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் |
| பெப். | 10 | தைப்பூசம் |
| ,, | 25 | மகா சிவராத்திரி |
| ஏப்ரல் | 10 | பங்குனி உத்தரம் |
| ,, | 14 | சித்திரை வருடப்பிறப்பு |
| மே | 10 | சித்திரைச் சித்திரை |
| ,, | 11 | சித்திரா பூரணை |
| ஜூன் | 8 | வைகாசி விசாகம் |
| ஜூலை | 1 | ஆனி உத்தரம் |
| ஜூலை | 17 | ஆடிப்பிறப்பு |
| ஆகஸ். | 23 | ஆடி அமாவாசை |
| ஆகஸ். | 27 | ஆடிப்பூரம் |
| ,, | 28 | நாக சதுர்த்தி |
| செப். | 1 | ஆவணி மூலம் |
| செப். | 7 | மஹாளய பக்ஷாரம்பம் |
| ,, | 21 | மஹாளய பக்ஷமுடிவு |
| ,, | 22 | நவராத்திரி விரதாரம்பம் |
| ,, | 28 | சரஸ்வதி பூஜாரம்பம் |
| ,, | 30 | சரஸ்வதிபூஜை |
| அக். | 1 | விஜயதசமி |
| ,, | 13 | புரட்டாதிக் கடைச்சனி |
| ,, | 20 | தீபாவளி |
| ,, | 21 | ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| ,, | 26 | ஸ்கந்தஷஷ்டி விரதம் |
| நவம். | 16 | ஐப்பசிக் கடைசிவெள்ளி |
| டிசம். | 2 | திருக்கார்த்திகை, குமாராலய தீபம். |
| ,, | 3 | சர்வாலய -விஷ்ணுவாலயதீபம் |
| ,, | 4 | விநாயக விரதாரம்பம் |

## கிறிஸ்தவ திருநாட்கள்

| | | |
|---|---|---|
| ஜன | 1 | இறைவனின் அன்னையாம் புனித மரியாள் |
| ,, | 8 | திருக்காட்சி விழா |
| ,, | 20 | புனித செபஸ்தியார் திருநாள் |
| பெப். | 2 | காணிக்கை மாதா திருநாள் |
| ,, | 28 | விபூதித் திருநாள் |
| மார் | 19 | புனித சூசையப்பர் திருநாள் |
| ஏப்ரல் | 8 | குருத்தோலை ஞாயிறு |
| ,, | 12 | பெரிய வியாழன் |
| ,, | 13 | பெரிய வெள்ளி |
| ,, | 15 | உயிர்த்த ஞாயிறு |
| மே | 13 | பாத்திமா மாதா திருநாள் |
| ஜூன் | 3 | பரிசுத்த ஆவியின் திருநாள் |
| ஜூன் | 13 | புனித அந்தோனியார் திருநாள் |
| ஜூலை | 2 | மடுமாதா திருநாள் |
| ,, | 16 | உத்தரியமாதா திருநாள் |
| ,, | 25 | புனித யாகப்பர் திருநாள் |
| ,, | 26 | புனித அன்னம்மாள் திருநாள் |
| ஒக | 5 | சின்னமடு மாதா திருநாள் |
| ,, | 15 | தேவமாதா பரலோகத்திற்கு எழுந்தருளிய திருநாள் |
| செப் | 8 | தேவமாதா பிறந்த திருநாள் |
| நவ | 1 | புனிதர்கள் திருநாள் |
| ,, | 2 | ஆத்துமாக்கள் தினம் |
| ,, | 26 | கிறிஸ்து இராசா திருநாள் |
| டிச | 8 | தேவமாதா மாசில்லாமல் உற்பவித்த திருநாள் |
| ,, | 25 | நத்தார் திருநாள் |

## பௌர்ணமி அமாவாசை தினங்கள்

| | ○ | ● | | ○ | ● |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 12 | 28 | ஜூலை | 9 | 23 |
| பெப்ரவரி | 11 | 26 | ஆகஸ்ட் | 7 | 22 |
| மார்ச் | 13 | 27 | செப்டம்பர் | 6 | 21 |
| ஏப்ரல் | 12 | 26 | அக்டோபர் | 5 | 20 |
| மே | 11 | 25 | நவம்பர் | 3 | 19 |
| ஜூன் | 10 | 24 | டிசம்பர் | 3 | 19 |

## பாடசாலைத் தவணை விடுமுறைகள் 1979

**1-ம் தவணை**
ஜனவரி 8 — ஏப்ரல் 6

**2-ம் தவணை**
மே 2 — ஆகஸ்ட் 3

**3-ம் தவணை**
ஆகஸ்ட். 22 — டிசம்பர் 5

முஸ்லிம் பாடசாலைகள்

**1-ம் தவணை**
ஜனவரி 8 — ஏப்ரல் 6

**2-ம் தவணை**
ஏப்ரல் 18 — ஜூலை 24

**3-ம் தவணை**
ஆக. 27 — டிசம்பர் 7

[அரசாங்க விடுமுறைகள் பாடசாலை விடுமுறை நாட்களாக இருக்கும். பொதுப் பரீட்சை, வெள்ளப்பெருக்குப் போன்ற காரணங்களுக்காக பாடசாலைகள் மூடவேண்டியேற்பட்டால் அனுமதி பெற்றுச் சனிக்கிழமைகளில் பதில் பாடசாலைகள் நடத்தவேண்டும்.]

## அரசாங்க, வங்கி, வர்த். விடுமுறைகள் 1979
(மாற்றத்திற்கு உரியன)

| | | |
|---|---|---|
| ஜனவரி | 12 | போயா †‡§ |
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் †‡§ |
| பெப்ரவரி | 4 | சுதந்திரதினம் †‡§ |
| பெப்ரவரி | 10 | நபிநாயகம் பிறந்ததினம் †‡§ |
| பெப்ரவரி | 11 | போயா †‡§ |
| பெப்ரவரி | 25 | மஹாசிவராத்திரி †‡ |
| மார்ச் | 13 | போயா †‡§ |
| ஏப்ரல் | 12 | போயா †‡§ |
| ஏப்ரல் | 13 | தமிழ் - சிங்கள புதுவருடத்திற்கு முதல் நாள் †‡§ |
| ஏப்ரல் | 14 | தமிழ்-சிங்கள புதுவருடம் †‡§ |
| மே | 1 | மே தினம் †‡§ |
| மே | 11 | போயா †‡§ |
| மே | 12 | வெசாக் தினம் †‡§ |
| மே | 22 | தேசியவீரர் தினம் †‡§ |
| ஜூன் | 9 | போயா †‡§ |
| ஜூன் | 30 | விசேட வங்கிவிடுமுறை ‡ |
| ஜூலை | 9 | போயா †‡§ |
| ஆகஸ்ட் | 7 | போயா †‡§ |
| ஆகஸ்ட் | 25 | ஈதுல் பித்ர் - நோன்புதினம் †‡ |
| செப். | 5 | போயா †‡§ |
| அக்டோபர் | 5 | போயா †‡§ |
| அக்டோபர் | 20 | தீபாவளி †‡ |
| நவம்பர் | 1 | ஹஜ்ஜுப் பெருநாள் †‡ |
| நவம்பர் | 3 | போயா †‡§ |
| டிசம்பர் | 3 | போயா †‡§ |
| டிசம்பர் | 25 | நத்தார் பண்டிகை †‡§ |
| டிசம்பர் | 31 | விசேட வங்கி விடுமுறை ‡ |

† அரசாங்க ‡ வங்கி § வர்த்தக விடுமுறை

## இஸ்லாமிய பெருநாட்கள்

| | | |
|---|---|---|
| பெப். | 10 | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| ஆகஸ்ட் | 25 | ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் |
| நவம். | 1 | ஹஜ்ஜுப் பெருநாள் |
| ,, | 22 | இஸ்லாமிய வருஷப்பிறப்பு |

## ஒருவார பேய்மழை தணிந்தது

# தலா 50 கிலோ அரிசிவழங்க

### முதல்வர் எம். ஜி. ஆர். உத்தரவு

சென்னை, டிச 31

சென்னை உட்பட தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலும் கடந்த ஒருவாரமாகப் பெய்துவந்த பேய்மழை தணிந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

செம்பரபாக்கம் ஏரி நிரம்பி விட்டபோதிலும் பீதிகொள்ளத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் வானம் வெளுத்துவருகிறது.

மீட்புவேலைகளின்பொருட்டு படகுகள், கட்டுமரங்கள், பஸ்கள் என்பன தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

**எம். ஜி. ஆர். உத்தரவு**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கும் தலா 50 கிலோ அரிசி இலவசமாக வழங்குமாறு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, சிவகாசியில் வெள்ளத்தின் போது இறந்தவர்களின் தொகை 31 ஆக உயர்ந்துள்ளது.

பஸ்விபத்தில் இந்த அசம்பாவிதம் உண்டானது தெரிந்ததே.

பஸ் சாரதியும், கண்டக்டரும் கைதுசெய்யப்பட்டு சிவகாசி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது அவர்களை 15 நாள் காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

பஸ்ஸில் பிரயாணம் செய்தோரில் 23 பேர் காப்பாற்றப்பட்டனர்.

விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு நியாய பூர்வஉதவி வழங்குமாறு பாரத மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடுகிளை மத்திய- மாநில அரசுகளை வலியுறுத்தியுள்ளது.

**ஜனதாவும் குமரி அனந்தனும் உதவி**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 6000 பேருக்கு தமிழ் நாடு ஜனதா கட்சி உணவு வழங்கியது.

காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. குமரி அனந்தனும் நிவாரண உதவி வழங்கினர். (உ)

# லஞ்ச வலையில் டாக்டர்கள்

### விசேட ஆணையாளர், பதிவாளர்

(கொழும்பு)

லஞ்ச ஆணையாளர் திணைக்களம் விரித்த வலையில் டாக்டர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர்கள், விகிதர்கள், பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள், சார்ஜன்ட்டுகள், கான்ஸ்டபிள்கள், ஸ்டோர் கீப்பர்கள், ஒரு விவாகப் பதிவாளர், பட்டணசபை ஒன்றின்விசேட ஆணையாளர் ஒருவர், ப. நோ. கூ. சங்க இயக்குநர் ஒருவர் உட்படப் பலர் லஞ்ச வலையில் சிக்கியுள்ளனராம். (உ)

### கொழும்பில் ஓராண்டுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொலை தொடர்பு பரிவர்த்தனப் பகுதியைச் சேர்ந்த 9 உத்தியோகத்தர்கள் இன்று முதல்வெள்ளவத்தை தபால் அதிபர் பயிற்சி நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு மரியநாயகம் போல், சி. வரதராஜா, பி. பரமநாதன், எஸ் சுப்பிரமணியம், பீ. சண்முகநாதன், பீ. சரவணமுத்து, கே. ரகுநாதன், கே ராஜரத்தினம், பி. குகதாசன் ஆகிய மேற்படி உத்தியோகத்தர்கள் ஒரு வருட பயிற்சி பெறுவர். (உ)

### இளைப்பாறினார்

(யாழ்ப்பாணம்)

உதவிஅஞ்சல் அதிபராக கடந்த நான்கு வருடங்களாக வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகத்தில் தொடர்ந்து கடமைபுரிந்த திரு ஐ. மதியாபரணம் சேவையில் இருந்து இளைப்பாறினார். அவரைப் பாராட்டி பிரிவுபசாரம் ஒன்று அஞ்சல் அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. (உ)

## மருத்துவ சிகிச்சை பெற

# ஈரானிய மன்னர் வெளிநாடு செல்வார்

### இவ்வாரம் புதிய அரசுஉதயம்

தெஹ்ரான், டிச. 31

ஈரானிய மன்னர் ஷா மருத்துவ சிகிச்சைகளின் பொருட்டு வெளிநாடு செல்வார்.

இத்தகவல் நேற்று தெஹ்ரானில் வெளியிடப்பட்டது. இதற்கு முன்னர் ''தற்போது நாட்டை விட்டு வெளியேறும் நோக்கம் இல்லை'' என்று மன்னர் அறிவித்திருந்தார்.

இது இவ்வாறிருக்க இன்னும் 6 நாட்களுக்குள் புதிய தேசிய அரசாங்கம் பதவியேற்கும் என்று எதிர்க்கட்சியான தேசிய முன்னணித் தலைவர் டாக்டர் பக்தியார் தெரிவித்தார்.

**வெளியேற்றம்**

தேசியமுன்னணியில்இருந்து டாக்டர் பக்தியார் வெளியேற்றப்பட்டுள்ளார்.

இவர் ஈரானிய பிரதமராகப் பதவியேற்பார்.

**ஆர்ப்பாட்டம் தொடர்கிறது**

இதேவேளை தெஹ்ரானிலும் மற்றும் நகரங்களிலும் மன்னருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெறுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## "கருத்து வேறுபாடுகள் பல தீர்ந்து விட்டன"

### எகிப்திய ஜனாதிபதி சொல்கிறார்

கெய்ரோ, டிச. 31

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான கருத்துவேறுபாடுகளில் பல இப்போது எகிப்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் தீர்ந்துவிட்டன என்று எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தெரிவித்தார்.

கெய்ரோவில் 200 வெளிநாட்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறுசொன்னார். ஆயினும் எகிப்து சில விஷயங்களில் தன் கொள்கையை ம. கி. பிரச்னையில் கைவிடாது என்றும் எகிப்திய அதிபர் சொன்னார். [உ]

## 'இந்திரா சிறையிலிருக்கையில் வன்முறை தலைதூக்கியபோது தமிழக அரசு அசமந்தம்''

### ஜனதா கட்சி கண்டனம்

சென்னை, டிச. 31

திருமதி இந்திராகாந்தி சிறையில் வைக்கப்பட்டதையடுத்து வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியபோது தமிழ் நாடு அரசு அசமந்தப் போக்குடன் நடந்துகொண்டது என்று தமிழ் நாடு ஜனதா கட்சி செயற்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

**கண்டன வாரம்**

வன்முறைச் சம்பவங்களையொட்டியும், தமிழ்நாடு அரசின் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்தும் ஜனவரி மாதம் 7 ம் திகதி முதல் 14 ம் திகதி வரை கண்டன வாரம் அனுஷ்டிப்பதென்றும் செயற்குழு தீர்மானித்துள்ளது.

செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு இலட்சுமணன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. (உ)

### முதலுதவிப் பயிற்சி

[நெல்லியடி]

கரணவாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இங்குள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் முதல் உதவிச் சிகிச்சை போதனா வகுப்பைஆரம்பித்துள்ளது. வாரத்திற்கொருதடவை மேற்படி முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படும்.

இப்போதனா வகுப்பு கரணவாய் வடக்கு தாமோதரம் பிள்ளை வித்தியாசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம் தலைமை வகித்தார். செல். ஜோன் அம்புலன்ஸ் சேவையினர் மேற்படி பயிற்சியை அளித்தார்கள்.

மேற்படி போதனா வகுப்பில் சித்திராவயா சனசமூகத்தை சேர்ந்த இளைஞர்களும் கலந்து கொண்டார்கள். (உ)

### மதுரையில் மாநாடு

மதுரை, டிச. 31

மதுரையில் அடுத்த மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒரு நாள் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது

சென்னைக்கு வெளியே மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று நடைபெறுவது இதுவேமுதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

### காரைநகரில் வெள்ளப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மழையினால் காரை நகரில் உள்ள சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

காரைநகரிலுள்ள நீலிட்பந்தனை என்ற இடத்திலுள்ள பெரியதொரு கேணியொன்று நிரம்பி வெள்ளத்தால் மூடப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றது இதனால் அப்பாதையால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

இக்கேணிக்கு அருகாமையிலுள்ள காரைநகர் ப. நோ. கூ. சங்கக் கிளையொன்றும் இவ்வெள்ளத்தில் சிக்கியுள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்குக் கஷ்டம் உண்டாகியுள்ளது. [உருத்-திரு-க]

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது அன்புகலந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
சகலவித றேடியோ - மணிக்கூடு
திருத்துவதிலும், விற்பனையிலும்
யாழ். நகரில் முன்னணி வகிப்பவர்கள்
**மலாயன் றேடியோஸ் சேர்விஸ்,**
45, கஸ்தூரியார் வீதி - ய்ாழ்ப்பாணம்.
போன்: 7885

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள்
அனைவருக்கும் இனிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
1979 உங்கள் நிறுவனம்...
ரவர் கோப்பி அன் கூல்பார்
ஃ பண்டிகைக்கான பட்சணங்கள் ஃ பட்டர்
ஃ மாஜரின் ஃ சுத்தமான கோப்பி
ஃ சுவைமிகு கேக் வகைகள் ஃ குளிர்பானங்கள்
அனைத்தையும் உண்டு மகிழ்வு பெற்றிட
நற்பெயர் பெற்ற ஸ்தாபனம்
**ரவர் கோப்பி அன் கூல் பார்,**
324, மணிக்கூட்டு கோபுர வீதி - யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7891

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இனிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**பசிக்காக புசிக்காமல்...**
**ருசிக்காக புசிக்க வேண்டுமா?**
நகரில்
ஃ அறுசுவை சிற்றுண்டிகள் ஃ மதிய போசனம்
ஃ குளிர்பானங்களுக்கு
சிறந்த சைவ ஸ்தாபனம்
புதிய நிர்வாகத்தில்
மக்கள் ஆதரவுபெற்ற ஸ்தாபனம்
**கிஸ்ண பவான்,**
35, 37 கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
**அன்னைவேளாங்கண்ணி**
(கலர்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார் - சுஜாதா
**அன்னக்கிளி**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
எம். ஜி. ஆர். - ராதா சலூஜா நடித்த
**இ த ய க் க னி** (புதியபிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
**ல லி தா**

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**பெண் தெய்வம்**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
**கணவன் மனைவி**

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
**ராமன் தேடிய சீதை**
(கலர் - புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்தவர்கள்**

**Rio** Daily at 10-30 a. m. 4-45, 7-00 9-30, p. m.
(Jaffna) Phone: 7607
NEW YEAR RELEASE...
RICHARD BURTON in
**5th OFFENSIVE**
Color (War Film) Scope
எமது ரசிகப் பெருமக்களுக்கு புதுப்பொலிவுடன்
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**REGAL** NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
Gamini Fonseke — Mary Tamm
in
**RAMPAGE**
(Jungle Adventure வனுந்தரசித்திரச் செயல்கள்)
(Color)

வெற்றிமுழக்கமிடும் 6வது வெற்றி வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் —Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
**BLOOD MONEY** (Scope - Color)

**வின்ஸர்** போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
கலைமாமணி சிவாஜிகணேசன்,
மாலினி பொன்சேகா
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு;
தியேட்டருக்கு வெளியே வேறு தியேட்டர்களில் பெற்ற டிக்கெட்டுகள் விற்கப்படுவதால் அவற்றை வாங்கி ரசிகர்கள் ஏமாறவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

## தேவை

பலசரக்கு மாளிகைக்கு விற்பனையாளர் தேவை. 20 வயதுக்கு உட்பட்ட இரண்டு வருட வியாபார அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். மு. க. தருமலிங்கம், 412, கே. கே. எஸ். வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 1190

சில்லுப் பொருத்தப்பட்ட கதிரை (WHEEL CHAIR) குருமனை, நவாலி, மானிப்பாய் என்ற முகவரிக்கு விலையைக் குறிப்பிட்டு எழுதுக. 1206

## அறிவித்தல்

1979- 01 - 01-ம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல்வரை அனுமதிப்பத்திரம் இல்லாமலே இத்தொழிற்சாலையிலிருந்து சீமெந்து விநியோகம் செய்யப்படும் என்பதை எமது வாடிக்கையாளர் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

தொழிற்சாலை
முகாமையாளர்.
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன் துறை.
1978-12-29. 1197

## பருத்தித்துறை நகரசபை விளம்பரம்

பின்வரும் வேலைக்கு 10-01-1979-ம் திகதி முற்பகல் 12-00 மணிவரை அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் விபரங்களை அலுவலகத்தில் நேரில் அறிந்து கொள்ளலாம்.

எக்கேள்விகளையாவது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ எனக்கு பூரண அதிகாரமுண்டு.

இரட்டை மாட்டு வண்டிச் சேவை (சாரதியுடன்) -1979

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.
நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
27-12-78. 1196

## சுங்க ஏல விற்பனை

1979-ம் ஆண்டு தைமாதம் 10-ம் திகதி [1979- 01- 10] காலை பத்து மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகள் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ம் தேதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. அவுட்போட் மோட்டர்கள்.
2. மீன்பிடி யந்திர பெற்றோல் டங்கிகள்.
3. இந்தியாச் சாரங்கள், சிறுவர் சட்டைகள்.
4. கைக்கடிகாரங்கள் (மொண்டா)
5. சட்டைத்துணிகள் (2×2)
6. மோட்டர் இயந்திர உதிரிப்பாகங்கள்.
7. பெற்றோல் உறுஞ்சும் பம்புகள் (அவுட்போட் மோட்டாரின்)
8. அலங்காரப் பொருட்கள் (சீப்புகள், குங்குமம், பிளாஸ்டிக் கோப்பைகள், கண்ணாடி, செருப்புகள், மணிக்கடைச் சாமான்கள்)
9. மணிக்கூட்டு பட்டிகள் மற்றும்பல.

எஸ். எம். ஜே.
சேனரத்தின,
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.
சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29-12-78. 1195

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவமுள்ள வியாபாரப் பிரதிநிதிகள் உடன்தேவை சிங்களம், தமிழ் பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. 5- 1- 79 காலை 10-00 மணிக்கு நேரிடையாக வரவும். கண்ணு புறடக்ஸ், சுன்னாகம். 1199

ஊதுபத்தி, கர்ப்பூரம் ஆகிய தொழிலில் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை உடனடியாக நேரிலோ கடிதமூலமோ தொடர்புகொள்ளவும். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் 119, கே. கே. எஸ். ரோட், கொக்குவில் (சந்தி). 1211

## விற்பனைக்கு

கடை, கட்டிடம், காணி- ஸ்ரான்லி ரோட், வெலிங்டன்- வின்சர் சந்திக்கும் நடுவில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் சச்சிதானந்தன், 138, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1177

## கல்வி

ஆங்கிலம்: உத்தியோகத்தர்க்கு; உயர்கல்வி மாணவர்க்கு; மகளிர்க்கு. யாழ்நகரிலும் திருநெல்வேலியிலும் ஆரம்பம் 12-1-79. நேரிலோ, தபாலிலோ விண்ணப்பிக்கவும். Muthulingam's English Academy; திருநெல்வேலி வடக்குச் சந்தி; யாழ்ப்பாணம். 1208

## விற்பனைக்கு

"இங்கிலாந்தில் சொற்ப காலம் பாவித்த கீழ் வரும் இயந்திரங்கள் மகக் குறைந்த விலையில் ஓடர்செய்து இரண்டு மாத காலத்தில் கொடுப்போம். கடைச்சல், சிலிண்டர்போரிங், பினியன், பல்லு வெட்டும்; துவாரம் துளைக்கும், மரம்சீவும், அரியும், இரும்பு வெட்டும்; அமுக்கும்; அச்சடிக்கும், இன்னும் பல கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களுண்டு" இம்மா என்ரப்பிறைசஸ் லிமிட்ரெட். 17, மின்சாரநிலையவீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 7566 1198

E. N. 3000 தொடரிலக்க போட்கொன்சல் மார்க் I கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 43/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1209

## வகுப்புகள்

Advance Level ஏப்பிரல் பரீட்சைக்குரிய இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல் பாடங்களில் 3 மாத துரித மீட்டல் வகுப்புகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது. விபரம் நேரில். மாணவர் போதனு நிலையம், 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1202

# CANTABIA INSTITUTE

(SHOOT OF OXONIA)
ICMA: IAA: Chartered Prelim
(லண்டன்) (இலங்கை)
BASIC ENGLISH

| வகுப்புகள் :- | | தொடங்கும் திகதி |
|---|---|---|
| ICMA (பகுதி A, B) | — | Just Commenced |
| Chartered Prelim | — | ,, ,, |
| IAA (பகுதி I) | — | ,, ,, |
| IAA (பகுதி II) | — | 9-1-1979 |
| IAA (பகுதி III) | — | 8-1-1979 |
| BASIC ENGLISH | — | 15- 1-1979 |

விரிவுரையாளர்: திரு. I. T. BENEDICT
விபரங்களுக்கு: சங்கரப்பிள்ளை கட்டிடம்,
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
1185

## 2-வது வருட நினைவாஞ்சலி

திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை



தோற்றம் 23-7-1907 நிறைவு 31-12-76

எங்களை எல்லாம் தவிக்க விட்டுமீளாத்துயில்கொண்டு விட்ட தங்களின் ஆத்மா சாந்தியடைய தங்களது இரண்டாவது ஆண்டு நிறைவு தினமாகிய (31-12-78) தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**மலாயன் றேடியோஸ் சேர்விஸ்**
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7885 (1207)

## அறிவித்தல்

யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரிப்
பெற்றார் ஆசிரியர் சங்கப்
**பொதுக்கூட்டம் 1979**

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 13-1-79-ந் தேதி சனிக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு, அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோரும் பாதுகாவலரும் தவறாது சமுகந்தருக.

12-1-1979-க்கு முன்னர் அங்கத்துவப்பத்திரம் அதிபர் அலுவலகத்திற் பெறப்பட்டுப் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்படவேண்டும். 1978-1979ம் ஆண்டுக்குரிய சந்தாப்பணமும் செலுத்தப்படவேண்டும். சந்தாப்பணம் செலுத்தியோரே வாக்குரிமையுடையோராவர்.

பழைய மாணவரும், பொதுநன்மை விரும்பிகளும் சந்தாப்பணஞ் செலுத்தி இச்சங்கத்தில் அங்கத்தவராகலாம்.

அ. மி. கல்லூரி. இணைக்காரியதரிசிகள்.
22-12-1978 1184

# ஆனந்தனின் புதிய சாதனை!

## ஜனாதிபதி வரவேற்பார்

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை மாலை 5-30க்கு 'டுவிஸ்ட்' நடனம் ஆடத் தொடங்கிய ஆழிக்குமரன் ஆனந்தன், இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை இடைவிடாமல் ஆடி, புதிய உலக சாதனையை ஏற்படுத்தினார்!

வெற்றிவாகை சூடி, பிறந்திருக்கும் புது ஆண்டின் முதல் நாளே புதிய உலக சாதனையை ஏற்படுத்தி, சர்வதேசரீதியில் ஈழத்துக்குப் பெரும் புகழ் தேடிக்கொடுத்திருக்கும் ஆழிக்குமரனை இன்று காலை 7-30 மணியளவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேரில் சென்று மகிழ்ச்சி தெரிவித்து வரவேற்பார். அதுவரை ஆனந்தன் தொடர்ந்து ஆடிக்கொண்டிருப்பார் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவுக்குப்பின்னர் வரை தொடர்ந்து நடனமாடி புதிய உலக சாதனையை ஏற்படுத்திக்கொண்ட பின்னர் மேலதிகமாக ஆகும் ஒவ்வொரு மணிநேரத்துக்கும் ஆயிரம் ரூபா வீதம் அவருக்கு கிடைக்கும். நிதி, மற்றும் அன்பளிப்புகளை, ஜனாதிபதியின் சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு ஆனந்தன் வழங்குவார்.

நேற்று வயிற்றில் சிறிது கோளாறு ஏற்பட்டபோதிலும், டாக்டர்கள் அளித்த சில மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு தொடர்ந்து ஆடினார்.

## யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி

(கொழும்பு)

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் திரு. ரணதுங்கா யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த உயர்மட்ட மகாநாட்டைத் தொடர்ந்து இவர் இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர் வடக்கில் பலப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நேரடிப் பொறுப்பாளராக இருப்பார். (க-அ)

## 150 மாணவருக்கும் பரீட்சை அனுமதி

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் இறுதியாண்டுப் பரீட்சைக்கு அனுமதி மறுக்கப்பட்ட சுமார் 150 மாணவர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு பரீட்சை எழுத அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வனுமதி மறுப்பு குறித்து இந்துமாணவர் மன்றத் தலைவர் திரு. என். நவரத்தினராஜா, பொறியியல் மாணவர் மன்றத் தலைவர் திரு. இ. ஜெயக்குமார் ஆகியோர் யாழ்ப்பாணம் உடுப்பிட்டி எம். பிக்களைச்சந்தித்து நிலைமையை விளக்கியதையடுத்து நல்லூர் எம். பி. யும், தொழில் நுட்ப ஆலோசனைச் சபைத் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரத்திடம் இவர்கள் கொழும்பில் வைத்து முறையிட்டனர்.

மாணவர் பிரதிநிதிகளின் முறைப்பாட்டையடுத்து திரு சிவசிதம்பரம் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகேயிடம் இவர்களைக் கூட்டிச்சென்று நிலைமையை விளக்கினார்.

டாக்டர் கல்பகே இம்முறை பிரஸ்தாப மாணவர்களுக்கு மன்னிப்பு அளிப்பதாகவும் அடுத்த தவணை வரவில்கருணை காட்டப்படமாட்டாதெனவும் தெரிவித்தார்.

[முன்னர் வந்த செய்தி 3-ம் பக்கத்தில்] (உ)

### இ. போ. ச. ஊழியர்களுக்கு

## சேமலாபநிதியிலிருந்து வீடு புதுப்பிக்கக் கடன்வசதி

(கொழும்பு)

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு அவர்களின் சேமலாபநிதியிலிருந்து 75 வீதம் கடனாக வழங்கப்படவுள்ளது. இக்கடன் வசதி ஊழியர்கள் தமது வீடுகளைப் புதுப்பிக்கவும்விசாலிக்கவும் வழங்கப்படவுள்ளது.

ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள இக்கடன்கள் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து கழித்தெடுக்கப்படும். இக்கடனுக்குக்குறைந்த வீதவட்டியும் அறவிடப்படும்.

இக்கடன்களை வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் இலங்கை மத்திய போக்குவரத்து சபையால்ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. கடன்பத்திரங்கள் இவ்வாரத்தில் அனைத்து இ. போ. ச. சாலைகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கடன் வசதியினால் இலங்கை மத்தியபோக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் 65,000க்கு மேற்பட்ட ஊழியர்கள் நன்மையடைவர். விரைவில் இக்கடன் கொடுப்பனவுகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(நெல்லியடி நி)

### யாழ். மாவட்டத்தில்

## வெங்காயச் செய்கை பெருஞ்சேதம்

### சந்தையில் விலையும் இறக்கம்

(கொக்குவில்)

யாழ் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையினால் மார்கழியில நடுகைசெய்யப்பட்ட சின்ன வெங்காயம் மூன்றுக் சேதம் அடைந்துள்ளது.

இதனால் வெங்காயச்செய்கையில் ஈடுபட்ட வடபகுதித் தோட்டக்காரர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் வெங்காயச் செய்கையைத் தொடங்குவதற்கு விதைவெங்காயம் தட்டுப்பாடாக இருக்கிறதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுவரை நடுகைசெய்யப்பட்ட வெங்காயத்தில் பெரும் பகுதி கடும்மழையினால் அழுகிபோனதாகவும் வேறு சில இடங்களில் நடப்பட்ட வெங்காயம் வெள்ளத்தில் அள்ளுபட்டுப் போய்விட்டதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க திருநெல்வேலிச் சந்தையில் ஒரு ரூத்தல் வெங்காயம் ஒரு ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

## யாழ்ப்பாணம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ப்பு முறை இன்று அமுலுக்கு வருகிறது. இதன்படி நாட்டில் ஏழு பல்கலைக்கழகங்கள் உதயமாகின்றன,

கொழும்புப் பல்கலைக்கழகம் கட்டுப்பெத்த பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஜெயவர்த்தனபுர (முன்னைய வித்தியோதயவளாகம்),களனி பல்கலைக்கழகம் (முன்னைய வித்தியாலங்கார), றுகுணைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவை இந்த ஏழுமாகும்.

இவற்றுக்கு முறையே பேராசிரியர் எம். ஆரியபாலா, பேராசிரியர் உபாலிகுறுப்பு, பேராசிரியர் பண்டிதரத்ன, பேராசிரியர் ஜினதாச பெரேரா, பேராசிரியர் திலகரத்னகர, கலாநிதி ஜி. வி. என், ஜெயசூரியா பேராசிரியர் சு வித்தியானந்தன் ஆகியோர் இன்று உபவேந்தர்களாகப் பதவியேற்கின்றனர்.

திறந்தவெளிப் பல்கலைக்கழக உபவேந்தராக கலாநிதி ரி விஜேசிங்கா பதவியேற்பார்.

### யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாக அந்தஸ்து பெறுவதையொட்டி எந்தவித ஆடம்பர வைபவமுமிருக்காது ஆலய வழிபாட்டுடன் பல்கலைக்கழகம் ஆரம்பமாகும்.

அடுத்தவருடத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கூடுதலான மாணவர்கள் சேர்க்கப்படுவார்களென்றும், வைத்தியபீடத்துக்கு அதி• நிதி வழங்கப்பட்டிருப்பதாகவும் உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'ஈழநாடு' பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விரைவில் விவசாய போதனாபீடமும் அமைக்கப்படுமென்றும் உபவேந்தர் சொன்னார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மிக விரைவில் பூரணத்துவமுள்ள ஒரு பல்கலைக்கழகமாக விளங்குமென்றும் உபவேந்தர் வித்தியானந்தன் நம்பிக்கை தெரிவித்தார்.

பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இதற்கு அவசியமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### அரியாலையில்

## கோஷ்டிச் சண்டை

(அரியாலை)

அரியாலைப்பகுதியில் குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை கோஷ்டிச் சண்டையாக உருமாறி அக்கிராமத்தையே பதட்டநிலைக்குள்ளாக்கியுள்ளது.

இக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் நான்குபேர் இதுவரை யாழ். பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைசெய்யப்பட்டபின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் இக்கோஷ்டியில் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்படும் பலர் தலைமறைவாகியுள்ளனர். இவர்களைத் தேடிப்பிடிப்பதில் பொலிசார் தீவிர கவனஞ் செலுத்தி வருகின்றனர்.

இக்கோஷ்டிச் சண்டையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஐந்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிகிறது.

இரு கோஷ்டியினருக்குமிடையில் சுமுகமான நிலையை ஏற்படுத்த அப்பகுதியைச் சேர்ந்த நல்லியக்க சபையினர் தீவிரமுயற்சி எடுத்துவருகின்றனர்.

பொலிசாரின் தீவிரகண்காணிப்பின் கீழ் இடட்குதி கொண்டுவரப்பட்டுள்ளது.

### கென்னடி, மார்ட்டின்லூதர்கிங்

## படுகொலைகள்பற்றி

### காங். குழு அறிக்கை

[வாஷிங்டன், டிச 31

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் கென்னடி, மாட்டின் லூதர்சிங் ஆகியோரது படுகொலைகளுக்கு சூழ்ச்சித் திட்டமே காரணமாக உள்ளது என்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்று இக் கொலைகள் குறித்து விசாரணை நடத்திவரும் அமெரிக்க காங்கிரஸ் குழு தனது அறிக்கையை தெரிவித்துள்ளது.

கென்னடியின் படுகொலையில் ஏனையவர்களின் பெயர்களை குறிப்பிடமுடியாமல் இருக்கிறது என்று குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

மார்ட்டின் லூதர் கிங்கின் கொலைக்கும் சூழ்ச்சித் திட்டமே காரணமாக இருந்துள்ளது என்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டென்று குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (உ)

## துன்பங்களின்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்குகின்றார்கள்.

இந்த நாட்டில் இயற்கையின் சோதனை ஒருபுறமும் ஆட்சியாளரின் பாதிப்பு மறுபுறமுமாகத் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமது உள்ளங்களில் எழத்தான் செய்கிறது. விடிவுக்கு முன்பு தான் இருள் அதிகமாக இருக்கும்'' என்பது ஆங்கிலப் பழமொழி.

1979ம் ஆண்டு தமிழனத்தின் வாழ்வில் ஒரு புதிய மலர்ச்சிக்கு இன்னும் சிறந்த ஒற்றுமைக்கு - அந்த ஒற்றுமையின் அடிப்படையிலே கட்டுப்பாடான செயலுக்கு அந்த செயலின் விளைவாகச் சுதந்திரம் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் புதுவருடத்தை வரவேற்போமாக

## இந்தியா: 1-70

(கல்கத்தா)

இந்தியா - மேற்கிந்திய 3-வது கிரிக்கெட் டெஸ்ட் (3-வது நாளான நேற்றைய) ஸ்கோர் விபரம்:

இந்தியா - முதல் இன்னிங் 300 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் ஒரு விக்கட் இழப்புக்கு 70 ஓட்டங்கள். மேற்கிந்திய - முதல் இன்னிங்ஸ் 327 ஓட்டங்கள்.

இன்று ஓய்வு நாள்.

## கிளிநொச்சி நூலகர்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறைப் பட்டின சபை நூலகராகக் கடமையாற்றிய திரு கே. பாஸ்கரன் இன்று முதல் கிளிநொச்சிப் பட்டினசபை நூலகராக நியமிக்கப்பட்டுள்ளார். [உ]

## தேசிய....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டின் தலைவிதியை மக்களே நிர்ணயித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்களென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 69?-வது தேசிய சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதற் பரிசு

22 A 0066

ரூபா 1 லட்சம்

இரண்டாம் பரிசு

14 J 0308

ரூபா 40 லட்சம்

மூன்றும் பரிசு

20 R 0995

ரூபா 10 லட்சம்

## வானொலிச் செய்தி அறிக்கை நீடிப்பு

[கொழும்பு]

இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தின் இரவுச் செய்தி அறிக்கை இன்று முதல் 5நிமிடம் கூட்டப்பட்டுள்ளது. இதுவரை காலம் 10 நிமிடமாக இருந்த செய்தி அறிக்கை 15 நிமிடமாக்கப்பட்டுள்ளது. [க-அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, [illegible] Phone: [illegible], Registered as a Newspaper in Sri Lanka.